**MCOP NO:1300/2024 DATE: 21.04.2026**

ம.சா : 2

பெயர் : திரு.சுரேஷ்குமார்

த/பெ : திரு.பெருமாள்

வயது : 46

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் மனுதாரர் தரப்பு கண்ணுற்ற சாட்சி ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான், அதை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 15 ஐ தாக்கல் செய்கிறேன்.

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீதிமன்ற அழைப்பாணை பேரில் சாட்சியம் அளிக்க வரவில்லை. மனுதாரர் தரப்பில் கேட்டுகொண்டதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். விபத்து குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை. யார் புகார் கொடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அடிபட்டதும் நான் அடிபட்ட நபரை நான் மருத்துவமனைக்கு அழைத்து செல்லவில்லை. விபத்து சமயத்தில் நான் வேறு ஒரு இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து பயணம் செய்து கொண்டிருந்தேன். நான் தாம்பரத்திலிருந்து செங்கல்பட்டு வழியாக என் வீட்டிற்கு சென்று கொண்டிருந்தேன். இருசக்கர வாகனமும், காரும் விபத்தில் சம்பந்தப்பட்டது. விபத்தில் இறந்த நபர் சாலையை கடக்கும் போது அவருக்கு விபத்து ஏற்பட்டது. பொதுவாக சாலையை கடக்கும் போது பாதசாரிகள் கடக்க போடப்பட்டிருக்கும் கோடுகள் உள்ள இடத்தில் சாலையை கடக்க வேண்டும் என்றால் சரிதான். பொதுவாக பாதசாரிகள் கடக்கும் இடத்தில் சாலையை கடக்காமல் இருபுறம் வரும் வாகனங்களை கவனிக்காமல் சாலையை கடந்தால் விபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு மேற்படி பாதசாரிகள் கடக்கும் இடத்தில் சாலையை கடக்காமலும், இருபுறம் வாகனம் வருவதை கவனிக்காமல் தவறான பாதையில் சாலையை கடந்ததால் அவருக்கு விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் விபத்து சமயத்தில் விபத்து நடந்த இடத்தில் இருந்தேன் என்பதை காட்டுவதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து குறித்த குற்றவியல் நீதிமன்றத்தில் நான் சாட்சியம் ஏதும் அளிக்கவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை. விபத்து குறித்த சாட்சி பட்டியலில் என் பெயர் இல்லை. விபத்தில் சம்பந்தப்பட்ட இரண்டு வாகனங்களின் நிறம் என்ன என்றால் காரின் நிறம் Grey ஆகும். இருசக்கர வாகனத்தின் நிறம்

தெரியாது. TVS XL வாகனம் என்று சொன்னார்கள். விபத்தில் அடிபட்ட நபர் விழுந்து கிடந்ததை தான் நான் பார்த்தேன் என்றால் சரியல்ல. விபத்தில் அடிபட்ட நபர் அடிபட்டதையும், அவர் கீழே விழுந்ததையும் நான் பார்த்தேன். விபத்து நடந்த போது நானும் அடிபட்ட நபரும் தவறான சாலையில் பயணம் செய்தோம் என்றால் சரியல்ல. அவ்வாறு பயணம் செய்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் காட்டாங்கொளத்தூரை சேர்ந்வர். விபத்தில் அடிபட்டு இறந்து போனவரும் காட்டாங்கொளத்தூரை சேர்ந்தவர்தான். நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றும், விபத்தில் இறந்து போன நபர் உறவினர் என்பதால் பார்க்காத விபத்தை பார்த்ததாக மனுதாரருக்கு உதவும் நோக்கில் இழப்பீடு பெறவேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.